2. உரிமைப் பிரச்னைகள்,

அ. மாண்புமிகு முதலமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 184-வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் அவை உரிமை மீறல் பிரச்னையை அவையில் கொண்டு வருவதற்கு அனுமதி கேட்டுள்ளார். அதே போன்று மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களும் அனுமதி கேட்டுள்ளார். அனுமதி வழங்கப் படுகிறது. திரு. ஜே. ஜேம்ஸ்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, பல நாட்களாக நான் இதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். இன்றைக்கு அதற்கான தகவல்களை நான் தயாராகக்கொண்டு வரவில்லை. இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று எனக்கு தாங்கள் சொல்லவும் இல்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் உங்களுக்கு அவகாசம் வேண்டும் என்றால், இதை திங்கள்கிழமை எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதற்கு ஒப்புக்கொள்கிறார்கள். ஆகவே இதை திங்கள்கிழமை எடுத்துக் கொள்கிறேன்.

ஆ. 'துக்ளக்' பத்திரிகை மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. பேரவையின் 184-வது விதியின கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்னையை அவையில் எழுப்ப மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப் படுகிறது. திரு. எஸ். ஆர். இராதா.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் 184-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த கீழ்கண்ட பிரச்னையை அவையில் எழுப்ப அனுமதி கோருகிறேன். 15-4-79 வெளிவந்துள்ள 'துக்ளக்' பத்திரிகையில் தலையங்கத்தில் சட்டமன்ற நடவடிக்கை பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அதில் மன்றத்தில் நடக்காததைப்பற்றி எழுதப்பட்டதன் மூலம் மன்றத்தின் உரிமை மீறப்பட்டிருக் கிறது. 7-4-79 அன்று எடுக்கப்பட்ட நடவடிக்கைப் பற்றி களங்கம் கற்பித்தும் எழுதப்பட்டிருக்கிறது என்பதையும், தலைவர் அவர்களுடைய தீர்ப்பை களங்கப்படுத்துகிற வகை யிலும் பல்வேறு பிரச்னைகளைப்பற்றி அதில் எழுதப்பட்டிருக் கிறது என்பதை நான் தங்களது கவனத்திற்கு கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

அதில் குறிப்பாக தனிப்பட்ட முறையில் என்னை களங்கப்படுத்துகிற வகையில் நான் அவையில் நடக்கக் கூடாத வகையில் தவறான வகையில் நடந்து கொண்டதாகவும், மிகவும் கேவலமான முறையில் என்னை